செய்தி வெளியீடு எண்: 14 தேதி: 08.03.2024

ஆளுநர் மாளிகை தமிழ்நாடு – செய்தி வெளியீடு

**மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி அவர்கள் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இன்று (08.03.2024) சென்னை ஆளுநர் மாளிகையில் அவ்வையார் சிலைக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்**

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி அவர்கள் சர்வதேச மகளிர் தினமான இன்று (08.03.2024) சென்னை ஆளுநர் மாளிகையில் தமிழ்க் கவிஞரும், துறவியும் மற்றும் பெண்களின் தலைமைச் சின்னமாக திகழும் அவ்வையார் சிலைக்கு மலர்தூவி மரியாதைசெலுத்தினார்.

ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி தனது உரையில், அவ்வையாரின் மரபே பெண்களின் தலைமை அடையாளமாக விளங்குகிறது என்றார். நம் வாழ்நாளில் ஒவ்வொரு தருணமும் நமது தாய்மார்கள், சகோதரிகள், பெண் தலைவர்களுக்கு நம் மரியாதையை செலுத்தி வருகிறோம். இந்த நாளில் பெண்களுக்கு சமத்துவமான மற்றும் பாதுகாப்பான சூழலை உருவாக்கும் உறுதிப்பாட்டை நாம் மீண்டும் உறுதிப்படுத்துகிறோம்.

கொள்கைகளில் ஏற்படும் மாற்றங்களை பிரதிபலிக்கும் வகையில் ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி, மாண்புமிகு பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்களின் தலைமையில் முன்னுதாரண மாற்றத்தை எடுத்துரைத்தார். அவர் மாண்புமிகு பிரதமர் திரு. நரேந்திர மோடி வந்த பிறகு, பெண்கள் மீதான தேசத்தின் கண்ணோட்டத்தையும் கொள்கையையும் அடிப்படையில் மாற்றினார். பெண்கள் அதிகாரம் என்ற வெற்று முழக்கங்களில் இருந்து, நாம் பெண்கள் தலைமையிலான வளர்ச்சி மற்றும்

நிர்வாகத்திற்கு செல்கிறோம். '**பேட்டி பச்சாவோ பேட்டி படாவோ**' ( **பெண் குழந்தையை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்**), ஒவ்வொரு பள்ளி, கல்லூரி மற்றும் நிறுவனங்களிலும் கழிப்பறைகள் கட்டுவது போன்ற பல நடவடிக்கைகள் மற்றும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக இன்று நமது பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் உயர் ஆராய்ச்சி நிறுவனங்களில் அதிகமான பெண் குழந்தைகள் உள்ளனர். அவர்களின் சேர்க்கை கணிசமாக உயர்ந்துள்ளது, மேலும், பல இடங்களில், ஆண்களை விட அதிகமான பெண்கள், மாணவர்களாகவும் மற்றும் ஆராய்ச்சியாளர்களாகவும் உள்ளனர். பெண்களின் ஆரோக்கியம் முதன்மையானது. நமது பெண்கள், மகள்கள், கைக்குழந்தைகள், தாய்மார்கள் மற்றும் சகோதரிகள் ஆரோக்கியமாக இருக்க பல நடவடிக்கைகள் உள்ளன .

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் நிதி உள்ளடக்கம் மற்றும் தொழில் முனைவோர் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை எடுத்துரைத்தார். நிதிச் சேர்க்கைக்காக, 50 கோடிக்கும் அதிகமான **ஜன்தன் கணக்குகள்** தொடங்கப்பட்டுள்ளன. மேலும் வங்கி கணக்கு வைத்திருப்பவர்களில் 50 சதவீதத்திற்கும் மேற்பட்டவர்கள் பெண்கள். பெண் தொழில் முனைவோரை ஊக்குவிக்கவும், பயன்படுத்தவும், **முத்ரா கடன் திட்டத்தின்** மூலமாக 40 கோடிக்கும் அதிகமான பயனாளிகள் தாங்கள் சொந்தமாக சிறு அல்லது நடுத்தர நிறுவனங்களைத் தொடங்க 23 லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் கடன் பெற்றுள்ளனர் . அவர்களில் கிட்டத்தட்ட பாதி பேர் பெண்கள். வீடற்றவர்களுக்கு **பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா (பிரதம மந்திரியின் குடியிருப்பு வீடுகள் திட்டம்)** கீழ் கிட்டத்தட்ட ஒரு கோடியே இருபது லட்சம் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு வீட்டிலும் இணை உரிமையாளர் ஒரு பெண். அவள் வீட்டில்

வசிப்பவள் மட்டுமல்ல, வீட்டின் உரிமையாளர். முத்தலாக் ஒழிப்பு நமது இஸ்லாமிய சகோதரிகள் மற்றும் தாய்மார்களுக்கு கண்ணியத்தை மீட்டெடுத்துள்ளது. இன்று, நம் பெண்கள் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் சம பங்கு வகிக்கிறார்கள். அவர்கள் சந்திரனுக்கும், சூரியனுக்கும் விண்கலன்களை அனுப்பி வருகிறார்கள். நமது பெண் ராணுவ விமானிகள் போர் விமானங்களை இயக்குகிறார்கள். **நாரி சக்தி வந்தன் ஆதினியம், பெண்கள் இடஒதுக்கீடு சட்டம், 2023 (அரசியலமைப்பு 106 வது திருத்தச்சட்டம், 2023)** பாராளுமன்றம் மற்றும் மாநில சட்டசபைகளில் பெண்களின் அதிக பிரதிநிதித்துவத்தை உறுதி செய்கிறது. சட்டம் இயற்றுவதில் அவர்களுக்கு அதிக பங்கு உள்ளது.

நாட்டின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் பெண்கள் முக்கியப் பங்காற்றுவதன் மூலம், 2047 ஆம் ஆண்டுக்குள் முழு வளர்ச்சி மற்றும் தன்னம்பிக்கையை அடைவதற்கான தேசத்தின் உறுதியை ஆளுநர் ரவி மீண்டும் உறுதிப்படுத்தினார். வளர்ச்சி மற்றும் நிர்வாகத்தில் பெண்களின் சம பங்குடன் இந்த தேசிய கனவு நிறைவேற்றப்படுகிறது என்றார். **மகாகவி பாரதியாரின் கனவை அர்ப்பணிப்புடன் நிறைவேற்றி வருகிறோம். மகாகவியின் "பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்" (பெண்கள் கல்வியறிவால் ஆளவும் இந்த உலகில் சட்டங்களை உருவாக்கவும் வந்துள்ளனர்)** என்ற வரிகளை அவர் மேற்கோள்காட்டினார் .

இந்த விழாவில் ஆளுநரின் செயலாளர் திரு.ஆர்.கிர்லோஷ்குமார், இ.ஆ.ப., ஆளுநர் மாளிகை அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் உடனிருந்தனர் .

*******************************************************************************************

ஆளுநர் மாளிகை, சென்னை - 22 | வெளியீடு:-
நாள்: 08.03.2024 | மக்கள் தொடர்பு அலுவலகம்